# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.32/2023

## அ.சா. 10(LW 16 )

| **பெயர்** | **திரு.ஈஸ்வரன்** | **தொழில்** | **தலைமை காவலர்** |
|---|---|---|---|
| **த/க பெயர்** | பழனிச்சாமி | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **23.02.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 வது எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். 2 ஆஜர்.

**<u>மொழிபெயர்ப்பாளர் திரு. அரவிந்தன் முன்னிலையில் பின்வருமாறு சாட்சிகளின் விசாரணை நடத்தப்பட்டது.</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திண்டுக்கல் தாலுகா காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2022ம் வருடம் வடமதுரை காவல்நிலையத்தில் பணிபுரிந்த போது 26.08.2022 அன்று காலை 11.00மணி அளவில் வடமதுரை காவல்நிலைய குற்ற எண். 294/2022 இதச பிரிவுகள் 302 இதச வழக்கின் முதல் தகவல் அறிக்கையை குற்றவியல் நீதித்துறை நடுவர் வேடசந்தூர் அவர்களுக்கும் , காவல்துறை சரகம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களும், காவல்துறை துணை கண்காணிப்பாளர் வேடசந்தூர் உட்கோட்டம் அவர்களுக்கும், காவல்துறை குற்றபதிவேட்டு துறை திண்டுக்கல் அவர்களுக்கும், காவல் ஆய்வாளர் தனிப்பிரிவு திண்டுக்கல் அவர்களுக்கும்முதல் தகவல் அறிக்கையை கொடுத்து விட்டு வருமாறு எனக்கு கொடுத்த கடவுச்சீட்டை பெற்று மேற்படியார்களிடம் ஒப்படைத்து விட்டு ஒப்பம் பெற்று விட்டு நிலையம் வந்து காவல் ஆய்வாளரிடம் அறிக்கை செய்தேன்.

**<u>1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

பாஸ்போர்ட் மற்றும் டியூட்டி ரூஸ்டரில் நான் அன்றைய தினம் பணியில் ஈடுபட்ட விவரங்களை பதிவு செய்துள்ளேன். நான் கடவுச்சீட்டை நிலைய எழுத்தரிடமிருந்து

11.00 மணிக்கு பெற்றேன். முதலில் வேடசந்தூர் நீதிமன்ற நடுவரிடம் ஒப்படைத்தேன். நான் முதல் தகவல் அறிக்கையை மாலை 04.20 மணிக்கு சென்று சேர்த்ததற்கான காரணம் என்னவென்றால் நான் நடுவரை சென்று பார்க்கும் போது மதிய உணவு இடைவேளை என்பதால் அப்போது பார்க்கவில்லை. அதன்பின்னிட்டு ஒப்படைத்து விட்டு வந்தேன். மேற்கூறிய விவரங்களை கடவுச்சீட்டில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. என் மேல்அதிகாரிகள் முதல் தகவல் அறிக்கையை நான் சொன்ன நேரத்தில் கொடுக்கவில்லை என்றாலும் பின்னிட்டு தாமதமாக என்னிடம் கொடுத்தார்கள் என்றாலும் அதனால்தான் நடுவரை சென்று சேருவதற்கு காலதாமதம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.02.23 19:03:55 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.